**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.161/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 5 |
| Name (திரு/திருமதி) | : ஜேசுதாஸ் |
| Father's Name/ Husband's Name | : மதளைமுத்து |
| Village & Taluk | : கல்லாடிகுளம் |
| Calling | : கூலி |
| Age | : 46 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.09.2026**

2ம் எதிரி ஆஜர். 1 மற்றும் 3ம் எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சியம் கையொப்பம் என்னுடையதுதான். சில வருடங்களுக்கு முன்பு நான் கல்லாடிகுளம் கிராமத்தில் இருந்தபோது ஒரு காவலர் என்னிடம் கையொப்பம் பெற்றார் எந்த வழக்கு என்று எனக்கு தெரியாது. **மேற்படி சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 10.12.2015 ம் தேதி பகல் 12.00 மணிக்கு நானும், எங்கள் ஊரை சேர்ந்த ஆரோக்கியதாஸ் என்பவரும் அவரது வீட்டின் அருகே இருந்தோம் என்றால் ஞாபகம் இல்லை. அப்போது நள்ளான் பிள்ளை பெற்றாள் காவலர்கள் ராபர்சேவியர் என்பவருக்கும் மனோஜ் ஆல்வின் என்பவருக்கு ஏற்பட்ட

சண்டை வழக்கு சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள் என்றால் தெரியாது. நான் காவலர்கள் படம் வரைந்தபோது உடனிருந்து அதனை பார்த்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் எங்கு வைத்து செய்தேன் என்பது தற்போது நினைவில் இல்லை. கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.